**1. தலைப்பு 307 – மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 307 – மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி திணைக்கள தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,602.00 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 3,407.35 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 194.65 மில்லியன் அதாவது 5.40 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,361.01 | 2,217.65 | 143.36 | 6.07 |
| மூலதனம் | 1,240.99 | 1,189.70 | 51.29 | 4.13 |
| மொத்தம் | 3,602.00 | 3,407.35 | 194.65 | **5.40** |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 04 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 11,360 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 11,934.58 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 105 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மிகை** | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன |
| 20.03.02.14 | 9,000.00 | 9,345.57 | 345.57 | 3.84 |
| 20.03.07.04 | 60.00 | 63.56 | 3.56 | 5.93 |
| 10.03.01.00 | 1,300.00 | 1,306.50 | 6.50 | 0.50 |
| 20.03.02.15 | 1,000.00 | 1,218.95 | 218.95 | 21.90 |
| மொத்தம் | 11,360.00 | 11,934.58 | 574.58 | **5.06** |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 35.29 | 26.79 | 20.00 | 32.36 | 135.00 | 93.98 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இரண்டு கட்டுநிதிக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 121.25 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 0/00/0000/7002075001/5000/ | 67.67 |
| 0/00/0000/700207500/97000/ | 53.58 |
| மொத்தம் | **121.25** |

## 2.5 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 07 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 499.28 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0161/000 | 2.00 |
| 6000/0000/00/0002/0053/000 | 0.22 |
| 6000/0000/00/0013/0027/000 | 3.45 |

| | |
|---|---|
| 6000/0000/00/0014/0004/000 | 409.35 |
| 6000/0000/00/0016/0010/000 | 18.03 |
| 6000/0000/00/0018/0012/000 | 66.04 |
| 6000/0000/00/0003/0159/000 | 0.19 |
| | -------- |
| | 499.28 |
| மொத்தம் | ==== |

**2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், இன்னுமொரு பதிவேடொன்றும் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அடியிதழ்சேர் புத்தக பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | - மேற்படி - |
| (iii) | செலவினப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மிகவும் குறைந்த வரித்தொகையொன்றினைச் செலுத்தி விஷேடமான செயற்பாடுகளுக்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த 21 வாகனங்கள் இரட்டை நோக்கு வாகனங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் உரிய செயற்பாடுகளுக்கே பயன்படுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாகனங்கள் பௌதீக ரீதியாக பரிசோதிப்பதற்கு முடியுமான வகையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்டிருந்த 345 மோட்டார் சைக்கிள்களுக்கும் மோட்டார் வாகனமொன்றுக்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 117.09 மில்லியனான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 02 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய பின்னர் தேறிய ஏற்பாட்டின் 47 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தன.

### 3.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கட்டுநிதி கணக்கில் 1997 ஆம் ஆண்டிலிருந்து வரும் ரூபா 53,575,400 ஆன கட்டுநிதி மீதி 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

02 ஆண்டுகளை மிகைத்த (காணி வைப்புக்கள் தவிர) ரூபா 1,536,011 கூட்டுத்தொயைான 57 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வருமானக் கணக்குகள்

திணைக்கள தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 04 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடுகளுக்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 20-03-02-15 ஆம் வருமானக் குறியீடு - மோட்டார் வாகனங்களை கையளிக்கும் போது வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணங்கள்**

சலுகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் 05 வருடங்களை கடப்பதற்கு முன்னர் வேறு தரப்பினருக்கு கையளிக்கும் போது அவ்வாகனங்களின் கொ.செ.வி. பெறுமதி அடிப்படையில் 10 சதவீதமான மேலதிக கட்டணமொன்று 2014 மார்ச் 26 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டுமென 2014 மார்ச் 25 ஆந் திகதிய TTIP/PIM/04/03/9-1 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் சுற்றறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்காக குறிப்பான வருமான குறியீடொன்று அறிமுகப்படுத்தப்படாததன் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது அவ்வாறு சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,003 மில்லியனான வருமானமொன்று 20.03.02.15 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது அதன் மூலம் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,218 மில்லியனான வருமானம் 20.03.02.15 ஆம் இலக்க புதிய வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் இக்கட்டண

அறவீட்டிற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 10-03-01-00 ஆம் இலக்க வருமானக் குறியீடு - ஆடம்பர மோட்டார் வாகன வரி வருமானம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை முறையாக வருமானப் பதிவேடொன்று பேணப்படாதிருந்ததால் முன்னைய ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 128(2)(இ) பிரகாரமும் 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 08 ஆம் பிரிவின் பிரகாரமும் முன்னைய ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டின் போதும் திணைக்களத்தினால் நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2002 யூலை 17 ஆந் திகதிய 02/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரமும் வருமானம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 10-03-07-04 ஆம் இலக்க வருமானக் குறியீடு - மோட்டார் வாகன விற்பனை வரி வருமானம்**

---

2002 யூலை 17 ஆந் திகதிய 02/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) 20-03-02-14 ஆம் இலக்கம் வருமானக் குறியீடு - மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள்**

---

2002 யூலை 17 ஆந் திகதிய 02/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரமும் வருமானம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

30701 ஆம் விட இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,882,356 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 27 வருடங்கள் வரையான

காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் கடன் வழங்கும் போது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் ரூபா 2,775,281 கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.8.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டமொன்றும் குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது 02 தடவைகள் மாத்திரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**3.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| தாபனவிதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவு | கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்குரிய மோசடிகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 155 | கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 156(5) | பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்குரிய கோவைகள் முறையற்ற விதத்திலும் பாதுகாப்பற்றும் பேணப்பட்டிருந்தன. |

**3.10 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தால் பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல்/ போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நோக்கமொன்றான மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்திற்கு உரிய நடவடிக்கைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதாகும். இதற்காக காணப்படும் கணனி முறைமையின் பலவீனங்களை நீக்கி பாரியளவில் இடம்பெறும் தவறுகள், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் என்பவற்றைத் தவிர்ப்பதற்கும் / வெளிப்படுத்துவதற்கும் முடியுமான வகையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக ஈ-மோடரின் செயற்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக நிதி ஏற்பாடு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 250 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2009 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 740 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக எந்தவொரு நடைமுறையொன்றும் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் தொடர்ச்சியாக வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு அவற்றின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மோட்டார் வாகனங்களுக்காக அறவிடப்படும் கட்டணங்களை திருத்தம் செய்து 2011 செப்தம்பர் 09 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த 1722/27 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் 2012 யூன் 15 ஆந் திகதிய 14 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் வாகனங்களின் உரித்தை மாற்றுவது தொடர்பாக குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வாகனங்களின் உரித்தை மாற்றும் போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் MTA-6 பிரதியில் குறிப்பிடப்படுகின்ற உடமையாளருக்கு புறம்பான வேறொரு நபருக்கு உரித்து மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை சீராக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தினை செயற்படுத்துவதற்காக பௌதீக வளங்களை முழுமையாக பயன்படுத்துவது திணைக்களத்தின் ஒரு நோக்கமொன்றாக இருந்த போதிலும், திணைக்களத்தினால் பதிவு செய்யப்படுகின்ற மற்றும் கையளிக்கப்படுகின்ற வாகனங்களுக்குரித்தாக திறந்து வைக்கும் கோவைகளை

முறையாகவும் பாதுகாப்பாகவும் வைப்பதற்காக தேவையான களஞ்சியங்களை விரிவுபடுத்தும் தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதற்காக தேவையான திட்டங்களை 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டு தேவையான ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 மாதங்களுக்கு மேற்பட்ட 03 ஆண்டுகளுக்கு குறைவான காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 110,881 கூட்டுத்தொகையான வங்கி வைப்புக்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்வையாகியிருக்கவில்லை.

**3.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) வாகனங்களை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய DMT/H/E/6/01 ஆம் இலக்க திணைக்களத்தின் உள்ளகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனங்களை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்துவது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வேறு பிரிவின் உத்தியோகத்தர்களாலும் 12 சந்தர்ப்பங்களின் போது வாகனங்கள் கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(ii) வாகனங்களை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தும் 20 சந்தர்ப்பங்கள் தொடர்பாக திணைக்களத்தின் கணனி முறைமையின் தவறுகள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 52 சந்தர்ப்பங்களில் வாகனங்களை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்துவதற்குரிய உறுதிப்படுத்தல் கடிதங்கள் (கணக்காய்வுச் சான்றுகள்) இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) விசேட நோக்கங்களுக்காக பழைய வேன் வண்டிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது சுங்க குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட உற்பத்தி ஆண்டிற்குப் பதிலாக எதிர்வரும் ஆண்டுகளில் (உற்பத்தி ஆண்டு வருடமொன்றோ அல்லது இரண்டினால் முன்கொண்டு வரப்பட்டு) காண்பிக்கப்பட்ட 14 மோட்டார் வண்டிகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(இ) 2011 செப்தம்பர் 23 ஆந் திகதிய சுங்க குறிப்பொன்று மூலம் இறக்குமதி செய்யப்பட்ட 47 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக உற்பத்தி ஆண்டு 2011 ஆம் ஆண்டு அல்லது

அதற்கு முன்னைய ஆண்டாக இருக்க வேண்டிய போதிலும், அம்மோட்டார் சைக்கிள்களைப் பதிவுசெய்யும் போது உற்பத்தி ஆண்டாக 2012 மற்றும் 2013 ஆண்டுகளாக எதிர்வரும் வருடங்கள் குறிப்பிடப்பட்டு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஈ) 8705 ஆம் இலக்க சுங்க குறிப்பின் கீழ் 7 சதவீதத்திற்கு குறைந்த சுங்க வரியொன்று செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்த 7 வருடங்கள் வரையான பழைய விசேட செயற்பாடுகளுக்கான 192 வாகனங்களும் 8704 ஆம் இலக்கத்தின் கீழ் 85 சதவீதம் முதல் 115 இற்கு இடைப்பட்ட வீச்சிலான சுங்க வரியொன்று செலுத்த வேண்டிய இரட்டை நோக்கு செயற்பாட்டு வேன் வண்டிகள் மற்றும் மோட்டர் லொறியாக குறிப்பிடப்பட்டு பதிவுசெய்யப்பட்டிருந்தன. இந்நிலைமை அரச வருமானம் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

## 3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் (203 அதிகாரத்தின்) 42(I)(அ) பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மோட்டார் போக்குரவத்து திணைக்களத்தில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் நிறுவனமொன்றாக பதிவு செய்யப்படாதிருந்த இரண்டு நிறுவனங்களினால் 2014 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்டிருந்த 07 மோட்டார் வண்டிகள், மோட்டார் போக்குரவத்து திணைக்களத்தில் பதிவு செய்யும் போது அந்நிறுவனங்களின் பெயரில் பதிவுசெய்யாமல் வேறு தனிப்பட்ட நபர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், திணைக்களத்தின் கணனி தளத்தின் தரவு பதிவுகளுடன் ஒப்பிட்டு மேற்கொள்ளப்படாமையால் போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு 214 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2014 சனவரி 01 ஆந் திகதி முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்யும் போது விண்ணப்பதாரிகளால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதனால் இலங்கை சுங்கத்தின் கணனி முறைமைக்கு உள்ளடக்கப்படாதிருந்த சுங்கக் குறிப்புக்கள் மற்றும் பொதியிடல் ஆவண இலக்கத்தைப் பயன்படுத்தி 227 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 2004 ஆகஸ்ட் 16 ஆந் திகதி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த 2001 ஆம் ஆண்டின் போது கொரியாவில் தயாரிக்கப்பட்டிருந்த ஹைஉண்டாய் (Hyundai) வகை வாகனம், 2011 ஆம் ஆண்டின் போது ஐக்கிய இராச்சியத்தில் உற்பத்தி செய்யப்பட்ட லேண்ட் ரோவர் (Land rover Defender) வகையான வாகனமொன்றாக 11 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 2015 யூலை 22 ஆந் திகதி திணைக்களத்தினால் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

## 3.14 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 203 அதிகாரத்தின் XIII ஆம் பகுதியின் 240 ஆம் பிரிவிற்கு முரணாக 2015 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 5582 ஆம் இலக்க சுங்க குறிப்பின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த இரட்டை நோக்கு வாகன வகைக்குரித்தல்லாத, வாகனமொன்று இரட்டை நோக்கு வாகனமொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

**3.15 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீராக்கம் செய்யப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 5.9(அ) (vii), (viii) | செயலாற்றல் |
| 2014 | 5.10 (ஈ)(உ)(ஐ)(ஔ)(எ)(ஒ) | சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் |
| 2014 | 5.11 (iii)(iv) | நிதி மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் |
| 2014 | 5.13(அ) | முகாமைத்துவ நலிவுகள் |

**3.16 முகாமைத்துவ பலவீனங்கள்**

மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்யும் மூலக்கோவைகளை முறையாகவும் நல்ல நிலைமையில் பாதுகாப்பாக வைக்கப்படாமையால் கோவைகள் காணாமல் போயிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. ஆதலால் மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்யும் கணனி முறைமையில் உள்ளடங்கியுள்ள தரவுகளின் சரியானதன்மை மூலக்கோவைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இதன் மூலம் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் போது முறைகேடுகள் தோன்றும் சூழலொன்று உருவாகியிருந்தது.

**3.17 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 27 | 23 | 04 |
| மூன்றாம் நிலை | 21 | 05 | 16 |
| இரண்டாம் நிலை | 790 | 723 | 67 |
| ஆரம்ப நிலை | 133 | 129 | 04 |
| மொத்தம் | 971 | 880 | 91 |

தாபன விதிக்கோவையின் 02 ஆம் அத்தியாயத்தின் 1, 2 மற்றும் 3 ம் பிரிவுகளுக்கு இணங்காமல் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் 200 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. இந்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோரும் போது அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பின் போது அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 75 பேரும், அநுராதபுர மாவட்டத்திலிருந்து 08 பேரும் களுத்துறை மாவட்டத்திலிருந்து 91 பேரும், ஏனைய 11 மாவட்டங்களலிருந்து 26 பேருமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். இந்நியமனங்களுக்காக விண்ணப்பங்கள் கோரல், நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் நியமனம் வழங்குதல் என்பன நியமன அதிகாரியால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த நிலைமையின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், தாபன விதிக்கோவையின் 2 ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குவதற்கு முடியாதிருந்தது.